**26.07.2022**

**OS.No. 295/2021 PW : 1, திருமதி. வள்ளியம்மாள்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

என் கணவர் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. இதற்கு முன்பு அவர் என்ன வேலை செய்தார் என்று எனக்கு தெரியாது. எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுத, படிக்க தெரியாது. நான் பள்ளிக்கு சென்றதில்லை. நான் கையொப்பம் போட மட்டும் கற்றுக்கொண்டேன். நான் நிலம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டால் என் கணவரை கேட்காமல் செய்யமாட்டேன். என் கணவர் பெயர் ராமன். அவரை ராம் ரெட்டி என்று அழைப்பார்கள். ராமா ரெட்டி என்று அழைக்கமாட்டார்கள். என் கணவரின் தம்பி பெயர் சுப்பிரமணி. என் கணவரின் கையெழுத்துக்கள் எனக்கு தெரியாது. சுப்பிரமணி என்பவரின் கையெழுத்துக்களும் எனக்கு தெரியாது. என் கணவர் எனக்கு இதுவரை சொத்துக்களை வாங்கி கொடுக்கவில்லை. நான் குடியிருக்கும் வீட்டின் பழைய கதவு எண் 38 ஆகும். நான் குடியிருக்கும் வீடு என் பெயரில் இருக்கிறது. அதை என்தந்தை ஏழுமலை நாயக்கர் தான் எனக்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. என் தாயார் எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் யார் கையொப்பம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. எழுதி கொடுத்த தேதி, மாதம் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. எனக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தை பூங்காவனம்மாள் எழுதி கொடுப்பதற்கு முன்னர் 1ம் பிரதிவாதிக்கு

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்தார். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை என் தாயார் ரத்து செய்துவிட்டு எனக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்தார். அந்த செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றும் யார் இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த ரத்து ஆவணம் மற்றும் என் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிய எழுத்தர் யார் என்று எனக்கு தெரியாது. என் தந்தை சொத்து எனக்கு வேண்டும் என்று நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் கேட்டவில்லை. 1996 மற்றும் 1997 வருடத்தில் நான் கையொப்பம் இட்ட ஆவணங்கள் எதையாவது தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. எனக்கு சொத்து விவரம் தெரியாது. செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்து விவரம் எனக்கு ஞாபகமில்லை. பொதுவாக என் பெயரில் எதாவது ஆவணங்கள் எழுதும் போது என் கணவர் தான் சாட்சி கையொப்பம் போடுவார். நான் 1996, 1997 வருடத்தில் நான் எந்த வழக்கறிஞரையும் பார்த்ததில்லை. நான் திருவள்ளூரில் உள்ள ஜி. ராமநாதன் மற்றும் சீனிவாசன் ஆகிய வழக்கறிஞர்கள் மூலம் 1996ல் முதன் முதலில் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரியல்ல. அதற்கு 1ம் பிரதிவாதியும் ஒரு பதில் அறிவிப்பை அனுப்பினார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்மீது அ.வ.எண்.497/ 1996 என்ற ஒரு வழக்கை திருவள்ளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

தாக்கல் செய்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவ்வழக்கில் எனக்கு அழைப்பானை சார்வானது என்றும் அவ்வழக்கில் நான் ஜி. ராமநாதன் மற்றும் சீனிவாசன் ஆகிய வழக்கறிஞர்கள் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை நடத்தினேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 07.06.1998 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் இல்லை. நான் சென்னை, திருவெற்றியூர் சேர்ந்த ரோசன் லால் மகன் சந்திரபிரகாஷ் என்பவருடன் 07.06.1998ல் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த ஒப்பந்தத்தின் மீது ரூ.1,00,000/-ஐ அட்வான்ஸாக வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் என் தாயார் பெயரை போட்டு 1ம் பிரதிவாதிக்கு மேற்கூறிய வழக்கறிஞர்கள் மூலம் ஒரு அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரியல்ல. என் தாயார் அவர் பெயரை போட்டு நான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்ப அதிகாரம் கொடுக்கவில்லை என்று எனக்கு என் தாயார் ஆர். மாறன் என்ற வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பை அனுப்பினார் என்றால் சரியல்ல. அதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையும் இருக்கிறது என்றால் சரியல்ல. அ.வ.எண். 497/1996 வழக்கில் உள்ள சொத்துக்கள் என் தாயார் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. என் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது சம்பந்தமாகவும் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்டது சம்பந்தமாக மேற்கூறிய

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

வழக்கு நடந்தது என்று சொன்னால் சரியல்ல. என் பெயரில் உள்ள 14.12.1995 தேதியிட்ட அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை என் வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தையும் என் வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே சமாதானம் ஏற்பட்டது என்றும் அப்போது மேற்கூறிய ஆவணங்களின் இரண்டு அசல் ஆவணங்களையும் 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியிடம் சமாதானத்தின் போது 13.11.1997ல் ரூ.2,25,000/- வாங்கிக்கொண்டேன் என்றும் அதற்கு ஒரு ரசீதையும் நான் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ரசீதில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் என்றும் அதில் என் கணவரும் முதலாவதாக சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து என் பெயரில் கூட்டு பட்டா கொடுக்கவேண்டும் என்றும் 1997 முதல் இன்றுவரை நான் நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த 25 வருடமாக தாவா சொத்திற்கு என் தந்தை பெயரில் தான் பட்டா இருக்கிறது. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. தற்போது தாவா சொத்து யார் பெயரில் பட்டா உள்ளது என்று சொன்னால் யு.டி.ஆர். திட்டத்தில் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டது. அந்த பட்டாவை ரத்து செய்ய நான் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. அந்த பட்டாவை ரத்து செய்து கொடுக்கவேண்டும் என்றும் பாகம் கொடுக்கவேண்டும் என்றும் நான் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு எதையும்

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

அனுப்பவில்லை. என் கணவரின் தம்பி சுப்பிரமணி அடையாறு பொன்னியம்மன் கோயில் தெரு கதவு எண் 9ல் இருந்தார். அவர் காலமாகிவிட்டார். என் தந்தையின் சொத்தை 1ம் பிரதிவாதி வைத்திருக்கிறார் என்றும் அதில் எனக்கும் பங்கு வேண்டும் என்றும் 3ம் நபர்கள் மூலம் கேட்டேன். எனக்கு விபத்து ஏற்பட்ட பின்னர் கேட்டேன். அவ்விதம் கேட்டு 7 வருடம் ஆகிறது. இந்த 7 வருடத்தில் 1ம் பிரதிவாதி மீது நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. தாவா சொத்தின் ஒரு பகுதியானது சென்னை டி.நகர் பியூட்டி கார்டன்ஸ் அன்ட் ரிசார்ட்ஸ் மேலான்மை இயக்குநர் பி.எல். நரசா ரெட்டி பெயரில் வருவாய் துறையில் பதிவு மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. அவர் மீது நான் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. சென்னை தாம்பரத்தை சேர்ந்த சசிரேகா என்ற வழக்கறிஞர் மூலம் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன். அந்த அறிவிப்பில் நரசா ரெட்டி பற்றி கூறியுள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. அவர் விற்றதோ வாங்கியதோ எனக்கு தெரியாது. 30.12.2020ல் நான் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பினேன். அந்த அறிவிப்பில் ஹைதராபாத் தடயவியல் அறிவியல் துறை நிபுனரின் அறிக்கை பற்றி கூறியுள்ளேன். அந்த அறிவிப்பை பற்றி என் முதல் விசாரணையில் கூறியுள்ளேன். அந்த அறிக்கையில் என்ன குறிப்படப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. சென்னையிலிருந்து நான் அறிக்கையை வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தை என் தாயாருக்கு சொத்தை

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

வாய்மொழியாக கிரையம் கொடுக்கவில்லை. அவ்விதம் வாய்மொழியாக கிரையம் கொடுத்திருந்தால் அது தவறாகும். ஏழுமலை நாயக்கர் மற்றும் பூங்காவனம்மாள் ஆகியோரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். வாரிசு சான்றிதழ் வாங்கவில்லை. ஏழுமலை நாயக்கர் இறந்த பின்னர் தாவா சொத்தை பொறுத்து எனக்கும் கூட்டுபட்டா கொடுக்கவேண்டும் என்று நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. பூங்காவனம்மாள் இறந்த பின்னர் தாவா சொத்தை பொறுத்து எனக்கும் கூட்டுபட்டா கொடுக்கவேண்டும் என்று நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. ஏழுமலை நாயக்கர் 1988ல் காலமானார். பூங்காவனம்மாள் 1998ல் காலமானார். என்னுடைய பெரிய மகளின் திருமணத்திற்கு மட்டும் 1ம் பிரதிவாதி வந்தார். மற்ற குழந்தைகளின் திருமணத்திற்கு அவர் வரவில்லை. நானும், 1ம் பிரதிவாதியை கூப்பிடவில்லை. பிராதில் பி அட்டவனை சொத்து பொறுத்து என் பெயரில் வரிவிதிப்பு இல்லை. ஆகவே நான் வரி செலுத்தவில்லை. என் தாயார் பெயரிலும் நான் வரிகட்டவில்லை. தாவா சொத்துக்களை நானோ, என் கணவரோ பயிர் செய்தது இல்லை. அ.வ.எண். 497/1996 வழக்கில் என்னை போன்று யாரோ கையொப்பம் போட்டுவிட்டார்கள் என்று இவ்வழக்கில் சொல்லியுள்ளேன். அந்த வழக்கு நடந்த நீதிமன்றத்தில் என்னை போன்று யாரோ கையொப்பம் போட்டுவிட்டார்கள் என்றும் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க நான் மனு எதுவும் கொடுக்க வில்லை. அவ்வழக்கிலிருந்து நான் சான்றிடப்பட்ட நகல்கள் எதையும் வாங்கவில்லை.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

இந்த இடைப்பட்ட காலத்தில் நான் 1ம் பிரதிவாதியிடம் பாகம் கேட்கவில்லை. அவ்விதம் பாகம் கேட்டதாக பிராதில் கூறியிருந்தால் நான் அவ்விதம் பாகம் கேட்கவில்லை. 2019 ஜனவரியில் 1ம் பிரதிவாதியிடம் நான் பாகம் கேட்கவில்லை. இவ்வழக்கை நான் எப்போது தாக்கல் செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. பிராதின் 6வது பாராவில் என்ன சொல்லியிருக்கிறேன் என்று எனக்கு தெரியாது. அதில் அ.வ.எண். 497/1996 மற்றும் அ.வ.எண். 432/1997 வழக்குகளை பற்றி கூறியிருக்கிறேன். இவ்வழக்கில் அ.வ.எண். 432/1997ல் வழக்கில் உள்ள தீர்ப்பு செல்லாது என்று கோரியிருக்கிறேன். பிராதில் பரிகாரம் பகுதியில் அ.வ.எண். 497/1996 கூறிவிட்டு அடித்திருக்கிறேன். அந்த வழக்கு குறித்து நான் ஏன் பரிகாரம் கேட்கவில்லை என்று எனக்கு தெரியாது. அ.வ.எண். 497/1996 வழக்கு தான் பிரதான வழக்கு என்றும் அது குறித்து பரிகாரம் கேட்டால் நான் மாட்டிக்கொள்வேன் என்றும் ஆகவே தான் அந்த வழக்கை பொறுத்து பரிகாரம் கேட்காமல் அ.வ.எண். 432/1997-ஐ பொறுத்து பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம்பிரதிவாதிக்கும் இடையே மேற்கூறிய இரு வழக்குகளிலும் சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்றும் அதில் நான் கையொப்பம் போட்ட அசல் சமாதான ஆவணம் ஒன்று 1ம் பிரதிவாதியிடம் இருக்கிறது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சமாதான ஆவணத்தில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் இல்லை. அ.வ.எண். 497/1996 என்ற வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் பிரதிவாதி என்மீது அ.வ.எண். 432/1997 என்ற ஒரு

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

வழக்கைஅதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றும் அதில் நான் வழக்கறிஞர் திரு. எல். தணிகைவேல் என்பவர் மூலம் ஆஜர் ஆனேன் என்றும் அதன் பிறகு தான் சமாதானம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கறிஞர் யார் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஐ.எ.எண். 5/2021ல் அ.வ.எண்.497/1996 வழக்கை எழுதிவிட்டு பின்னர் அடித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.497/1996 வழக்கில் சமாதானம் ஏற்பட்டது என்றும் அதில் ரூ.2,25,000/- 1ம் பிரதிவாதியிடமிருந்து நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த சமாதான தீர்ப்பு அ.வ.எண்.432/1997ல் ஏற்பட்ட சமாதானத்திலும் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. கையெழுத்து நிபுனருக்கு அசல் ஆவணத்தை அனுப்பினேனா அல்லது ஜெராக்ஸ் ஆவணத்தை அனுப்பினேனா என்று கேட்டால் நான் என் கையெழுத்தை போட்டு அனுப்பினேன். ஜெராக்ஸ் ஆவணத்தில் உள்ள கையெழுத்தை தான் நான் போட்ட கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய நிபுனருக்கு அனுப்பினேன். போலீஸ் மூலம் அனுப்பினேன். அடையாறு போலீஸ் மூலம் அனுப்பினேன். போலீஸ் மூலம் அனுப்பியதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் நானே நேரடியாக எடுத்து சென்று ஒப்பீடு செய்ய நான் கேட்டதாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நிபுனருக்கு நான் தான் பணத்தை கட்டினேன். நான் பணத்தை போலீஸார் மூலம் கொடுத்தேன். நான் கையெழுத்து நிபுனருக்கு வேறு

S GANAPATHISAMY
Digitally signed by S GANAPATHISAMY

ஆவணங்கள் எதையும் கொடுக்கவில்லை. நான் வேறு ஆவணங்களை கொடுத்ததாக அறிக்கையில் குறிப்பிட்டிருந்தால் நான் வேறு ஆவணங்களை கொடுக்கவில்லை. மேற்கூறிய இரு வழக்குகளிலும் நீதிபதி முன்பு சமாதானம் ஆகிவிட்டு கையெழுத்து போட்டுவிட்டு அது என் கையெழுத்து இல்லை என்று தற்போது பொய்யாக வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.497/1996 பொறுத்து பரிகாரம் கேட்காமல் அ.வ.எண்.432/1997 பொறுத்து நான் பரிகாரம் கேட்டமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் என் தரப்பில் சாட்சி யாரையும் விசரிக்க இருக்கிறேனா என்று கேட்டால் என் தரப்பில் சாட்சி சொல்ல ஆள்இல்லை.

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

I Additional District and Sessions Judge,
Tiruvallur.